# மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

## *தாவீதின் குமாரன் (2 சாமு. 7:12)*

*கி.மு. 1000 ஆண்டளவில் இஸ்ரவேலின் அரசராய் இருந்த தாவீது, தேவனுடைய வீடாய் இருப்பதற்காக ஒரு நிலையான ஆலயத்தைக் கட்ட விரும்பினார். இதற்குப் பதிலுரையாக தேவன் தாவீதுக்கென்று தாம் ஒரு வீட்டைக் கட்டப் போவதாகக் கூறினார் (2 சாமு. 7:11). தாவீதுக்காகத் தேவன் திட்டம் செய்திருந்த வீடானது மரம் மற்றும் கல்லினால் ஆனதாய் இருக்காது: அது தாவீதின் பின் சந்ததியாய் இருக்கும். அது ஒரு குடும்ப - வீடாக, அவரது கர்ப்பப் பிறப்பின் சந்ததியாக இருக்கும். தாவீதின் மகனான சாலொமோனைப் பற்றி தேவன் பின்வருமாறு நேரடியாகப் பேசினார்:*

> *அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன். நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்; … உன் வீடும், உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் (2 சாமு. 7:13, 14அ, 16).*

*இருந்தாலும், தேவன் இவ்விடத்தில் தாவீது என்ற "உம்முடைய அடியானைக் குறித்து வெகு தூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை" (2 சாமு. 7:19)ப் பற்றியே மறைமுகமாய்ப் பேசினார். இந்தத் தீர்க்கதரிசனமும் வாக்குத்தத்தமும் சாலொமோனின் நாட்களுக்கு வெகு காலத்திற்குப் பின்பு வந்து சேர்ந்தது.*

*தேவனுடைய வாக்குத்தத்தமானது ஒரு ஆணையின் வடிவில் கொடுக்கப்பட்டது: "ஒருவிசை என் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய் சொல்லேன். அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்; அவன் சிங்காசனம் சூரியனைப் போல எனக்கு முன்பாக நிலைநிற்கும்" (சங். 89:35, 36); "உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின் மேல் வைப்பேன் என்றும் … கர்த்தர் தாவீதுக்கு*

*உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவறமாட்டார்" (சங். 132:11, 12). அதிகாரிகளும், அரசர்களும் மற்றும் மக்களும் தாவீதின் குமாரனை எதிர்த்து நின்றாலும் (சங். 2:1-3) தேவன் தமது ஆணையை நிறைவேற்றத் தீர்மானம் செய்தவராய் இருந்தார். தேவன் "நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணி வைத்தேன்" (சங். 2:6) என்று கூறுவார் என்பதாகச் சங்கீதக்காரர் முன்னுரைத்தார். தாவீதின் சந்ததியைப் பற்றித் தேவன் என்ன கூறுவார் என்பதையும் சங்கீதக்காரர் பின்வருமாறு முன்னுரைத்தார்: "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்" (சங். 2:7).*

*தாவீது தம் சந்ததியைப் பற்றி அசாதாரணமான முன்னுரைத்தல்களை ஏற்படுத்தப் பரிசுத்த ஆவியானவர் அவரை அனுமதித்தார். தாவீது தமக்குப் பின்வருபவரைத் தம் சொந்த "கர்த்தர்" (சங். 110:1) என்று அழைத்தார். ஒரு தகப்பனானவர் தமது பின் சந்ததியின் கர்த்தத்துவத்தின் கீழ், அதிகாரத்தின் கீழ் வருவது என்பது வழக்கத்திற்கு மாறானதாகும்; இருந்தாலும் தாவீது தரத்தில் குறைந்தவர் என்று தன் சந்ததிக்கு தெளிவாக முன்னுரைத்தார். மேலும், தாவீது தம்முடைய சந்ததியின் அதிகாரத்திற்குரிய இடம் பூமிக்குரிய எருசலேம் அல்ல ஆனால் அது தேவனுடைய "வலது பாரிசமாய்" இருக்கும் (சங். 110:1) என்பதையும் முன்னதாகக் கண்டார். தாவீது, தம்முடைய குமாரன் ஒரே வேளையில் இராஜாவாகவும், ஆசாரியராகவும் இருப்பார் என்று முன்னுரைத்தது மிகவும் அசாதாரணமானதாகும்: "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியரா யிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்" (சங். 110:4; சகரி. 6:13ஐக் காணவும்). தாவீது ஒரு ஆசாரியராய் இருந்ததில்லை, இருந்திருக்கவும் முடியாது; அவரது அரியணையானது பரலோகத்திலே, தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்ததில்லை. இந்த வசனங்களில், தாவீது தம்முடைய சந்ததியின் மிக உயர்ந்த நிலையை உணர்ந்திருந்தார்.*

*அத்துடன் கூடுதலாக தாவீது, என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் அரியணை பெற்ற ஒருவரைப் பற்றியும் கூறினார் (சங். 45:6), அந்தத் தனி நபரை அவர் "தேவன்" என்று அழைத்தார். இது போன்ற தைரியமிக்க முன்னுரைத்தல்கள் எப்படி எப்பொழுதாவது நிறைவேற்றப்பட்டிருக்க முடியும்? தாவீதின் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் ஒரு அரியணையைப் பெறுவார், அவர் தாவீதுக்குச் சொந்தமான கர்த்தராய் இருப்பார், அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் இருப்பார், அவர் தம்முடைய அரியணையில் ஒரு ஆசாரியராய் இருப்பார், மற்றும் அவர் தேவனாக இருப்பார்!*

*தாவீதின் மரணத்திற்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப் பிற்பாடு, ஓசியா என்பவர் எதிர்காலத்தை உற்றுப் பார்த்து, கடைசி நாட்களில் இஸ்ரவேலின் பிள்ளைகள் தேவனையும், "தங்கள் ராஜாவாகிய தாவீதையும்" (ஓசி. 3:5) தேடுவார்கள் என்று கூறினார். இறந்து போன ராஜாவை அல்ல, ஆனால் அவரது பின் சந்ததியில் வந்தவரும், "தாவீது" என்று உரிமையுடன் அழைக்கப்படக் கூடியவருமான ஒருவரையே அவர்*

*குறிப்பிட்டார் என்பது தெளிவு.*

*கி.மு. எட்டாவது நூற்றாண்டுத் தீர்க்கதரிசியான ஏசாயாவின் கூற்றுப்படி, தாவீதின் சந்ததியில் வரப் போகிறவராய் இருந்தவர் கீர்த்தி பெற்ற தம் தகப்பனைக்காட்டிலும் மேம்பட்டவராய் இருப்பார். அவர் ''தாவீதின் அரியணையிலும் அவரது இராஜ்யத்திற்கு மேம்பட்ட நிலையிலும்'' மதிப்பிற்குரிய தகுதிப் பெயர்களைப் பெற்று, அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்று குறிப்பிடப்படுவார் (ஏசா. 9:6, 7). அவர் மேற்கொள்ளும் நிர்வாக முறைமையும் முன்னுரைக்கப்பட்டது: ''கிருபையினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும்; நியாயம் விசாரித்துத் துரிதமாய் நீதி செய்கிற ஒருவர் அதின் மேல் தாவீதின் கூடாரத்திலே நியாயாதிபதியாய் உண்மை யோடே வீற்றிருப்பார்'' (ஏசா. 16:5).*

*இவருக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுப்பதாகத் தேவன் வாக்களித்திருந்தார்: "தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின் மேல் வைப்பேன்; ஒருவரும் பூட்டக் கூடாதபடிக்கு அவன் திறப்பான், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு அவன் பூட்டுவான்" (ஏசா. 22:22). இந்த சந்ததியின் மூலமாக மக்கள், "தாவீதுக்கு அருளிய நிச்சயமான கிருபைகள்" என்று விவரிக்கப்படும் தேவனுடைய நித்திய உடன்படிக்கையில் பங்கேற்கும்படி அழைக்கப்படுவார்கள் என்று ஏசாயா கூறினார் (ஏசா. 55:3). தாவீதின் மரணத்திற்குப் பின் சுமார் நானூறு ஆண்டுகள் கழித்து, பரலோகத்தைப் பற்றிய நிச்சயமான வாக்குத்தத்தத்தைச் சான்றளித்து உறுதிப் படுத்துவதற்குத் தேவன் ஏரேமியாவையும் பயன்படுத்தினார் (ஏரே. 33:20, 21).*

*தாவீதின் மரணத்திற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு, யூதர்கள் பாபிலோனில் இருக்கையில், தேவன் (முன்னரே) தாம் தாவீதுக்குக் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை மறுபடியும் உறுதிப்படுத்தினார்: ''அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பனை நான் அவர்கள் மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; ... கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாக இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்; ..." (எசே. 34:23, 24). தேவன் ஓசியாவை கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்திருந்தது போலவே, தாவீதின் சந்ததியைத் தாவீதாகவே குறிப்பிட்டு எசேக்கியேலின் மூலமாகவும் பேசினார். பின்பு தேவன் வாக்குத்தத்தத்தை மறுபடியும் கூறினார்: "என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள் மேல் ராஜாவாக இருப்பார்; ... என் தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார்" (எசே. 37:24, 25).*

*தாவீதின் தெய்வீக சந்ததியைப் பற்றிய ''வெகு தூரமாயிருக்கும் காலத்து'' (2 சாமு. 7:19) திகைப்பூட்டும் முன்னுரைத்தல்களானவை தாவீது (மரித்து) கல்லறையில் வைக்கப்பட்டு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு நிறைவேறத் தொடங்கின. நாசரேத்தூரைச் சேர்ந்த மரியாள் என்ற பயபக்தியுள்ள ஒரு பெண்ணிடத்தில் அவளுக்கு ஒரு மகன் பிறப்பார் என்று கூறுவதற்காகக் காபிரியேல் தூதன் அனுப்பப்பட்டார். அவர் அவளிடத்தில்,*

*“அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்” (லூக். 1:32) என்று உறுதி யளித்தார். தேவன் தம்முடைய நெடுநாளைய வாக்குத்தத்தத்தை விரைவில் நிறைவேற்றுவார் என்பதே காபிரியேலின் செய்தியாக இருந்தது: “நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்” (2 சாமு. 7:14அ). அவர் மரியாளிடத்தில், “உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்” (லூக். 1:35) என்று கூறினார்.*

*யூதர்கள் கிறிஸ்துவைத் தாவீதின் சரீரப் பிரகாரமான மகன் என்பதாக மட்டுமே கண்ணோக்கினார்கள், அவரை இந்த அகிலத்தின் கர்த்தர் என்று கண்ணோக்காதிருந்தார்கள். இருந்தாலும், தம்முடைய குமாரன் தனது கர்த்தராயிருப்பார் என்ற தாவீதின் வார்த்தைகளை இயேசு சுட்டிக்காட்டிய பொழுது அவர்கள் வாயடைத்துப் போனார்கள் (மத். 22:41-46).*

*தாவீதோ அல்லது வேறு எவருமோ ஒருபொழுதும் செய்திராததை இயேசு செய்தார். “அழிவுக்குட்படாதபடி அவரை மரித்தோரிலிருந்து” (அப். 13:34) தேவன் எழுப்பினார். அதன் பிறகு அவர் “தாவீதுக்கு அருளின பரிசுத்தமும் நிச்சயமுமான கிருபைகளை” (அப். 13:34) பெறுவதற்கு ஆயத்தமாக்கப்பட்டார், இதை எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே ஏசாயா முன்னுரைத்திருந்தார் (ஏசா. 55:3). தாவீதின் ஒரு சந்ததியானது தாவீதின் அரியணையில் (2 சாமு. 7:12-14) என்றென்றும் வீற்றிருக்கும் என்று தாவீதுக்கு அருளப்பட்ட நிச்சயமான கிருபையானது அவருக்குப் பின் வந்தவரும், ஒருக்காலும் மரிக்கக் கூடாதவருமாயிருக்கும் ஒருவருக்குள் திகைப்பூட்டும் விதத்தில் நிறைவேறியது.*

*தேவன், “நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்” (சங். 2:7ஆ; மற்றும் அப். 13:32; ரோமர் 1:5 ஆகியவற்றைக் காணவும்) என்று தம்முடைய முன்னுரைத்தலில் குறிப்பிடுமளவுக்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் அவ்வளவு முக்கியத்துவமுள்ளதாக இருக்கின்றது. ஒரு வகையில் இயேசு அவருடைய உயிர்த்தெழுதலுக்கு முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டிருந்தார் (லூக். 1:35). இருப்பினும் உருவகக் கருத்தில், அவர் தமது உயிர்த்தெழுதலின் நாளில்தான் தேவனுடைய குமாரன் ஆனார் (அப். 13:32).*

*உயிர்த்தெழுந்து ஐம்பது நாட்களுக்குப் பிறகு, இயேசு, பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் தாவீதின் ஆவிக்குரிய அரியணையில் அமர்ந்தார் (அப். 2:29-31). இது பல முன்னுரைத்தல்களை நிறைவேற்றியுள்ளது: சங். 2:6; 132:11; 89:34-37; ஏசா. 9:6, 7; 16:5; ஓசி. 3:5; எரே. 33:20, 21; எசே. 34:23, 24; 37:24, 25. உயிர்த்தெழுதலில் தனது முதல் நிறைவேற்றத்தைக் கொண்டிருந்த அதே தீர்க்கதரிசனமானது (“இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்”; சங். 2:7) பெந்தெகொஸ்தே நாள் அன்று இயேசுவின் முடி சூட்டுதலின் போதும் நிறைவேறியது (எபி. 1:1-5). அன்றுதான் அவர் சங். 110:1ன் நிறைவேற்றமாக தேவனுடைய வலது*

*பாரிசத்தில் அமர்ந்து முதன்மையான இடத்தையும் சகல அதிகாரத்தையும் பெற்றார் (அப். 2:35; எபி. 1:3). முன்னுரைக்கப்பட்டபடி தாவீதின் திறவுகோலானது (ஏசா. 22:22) இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது (வெளி. 3:7). பரலோகத்தின் தேவன் இயேசுவை ''தேவன்'' என்று அழைத்தார் (சங். 45:6; எபி. 1:8, 9).*

*மற்றும் இயேசு அரசராக முடி சூட்டப்பட்ட அந்த நாளே அவர் பிரதான ஆசாரியராக்கப்பட்ட நாளாகவும் ஆயிற்று (எபி. 5:5). இதுவும் கூட முன்னுரைக்கப்பட்டிருந்தது (சங். 110:4). கேள்விப்பட்டிராத மற்றும் மறக்க முடியாத முன்னுரைத்தல்கள் யாவும் கவனமாய் நிறைவேற்றப்பட்டன! மரணத்தை என்றென்றைக்குமாக வெற்றி கொண்டவரான தாவீதின் குமாரன், தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார், அவர் பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் தாவீதின் கர்த்தராக்கப் பட்டார், எல்லா அதிகாரமும் அவருக்குத் தரப்பட்டது, அவர் பிரதான ஆசாரியரானார் மற்றும் "தேவன்" என்று மதிக்கப்பட்டார்/தலைவணங்கப் பட்டார்!*

*பின்னோக்கிக் காண்கையில் ஒருவர், ''தாவீதின் குமாரன்'' என்ற தீர்க்கதரிசனத்தில் பல முன்னுரைத்தல்கள் உள்ளடக்கப்பட்டதைக் காண முடியும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் தாவீதின் சந்ததியாக (2 சாமு. 7:12), தாவீதாக (ஓசியா 3:5), தாவீதின் ஆண்டவராக (சங். 110:1), ஒரு மேய்ப்பராக (எசே. 37: 24, 25), ஒரு ஆசாரியராக (சங். 110:4), அதிசயமான ஆலோசனைக் கர்த்தராக (ஏசா. 9:6), வல்லமையுள்ள தேவனாக (ஏசா. 9:6), நித்திய பிதாவாக (ஏசா. 9:6), சமாதானப் பிரபுவாக (ஏசா. 9:6), தேவனு டைய குமாரனாக (2 சாமு. 7:14) மற்றும் தேவனாக (சங். 45:6) இருப்பார். அவர் தாவீதின் அரியணையையும் (சங். 89:35, 36), தாவீதின் திறவுகோலையும் (ஏசா. 22:22) மற்றும் தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளையும் (ஏசா. 55:3) பெற்றிருப்பார்.*

## *பெத்லகேமியர் (மீகா 5:2)*

*கி.மு. எட்டாம் நூற்றாண்டில் மொரேசா ஊரைச் சேர்ந்த மீகாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை வந்தது. மற்ற முன்னுரைத்தல்களுடன், கர்த்தர் முக்கியத்துவமற்ற கிராமம் ஒன்றை குறிப்பிட்டு அது கீர்த்தியுடையதாய் இருக்குமென்று முன்னுரைத்தார். ''எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, ... இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2).*

*எழுநூறு வருடங்களுக்கு மேல் கழிந்த பிறகு, ஒரு கணவரும், அவருடைய (கன்னியும் கர்ப்பவதியுமாயிருந்த) மனைவியும் நாசரேத்திலிருந்து பெத்லகேம் என்ற சிறிய நகருக்குப் பயணமாகி வந்தார்கள். அவர்கள் அங்கிருக்கையில், அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்றெடுத்தாள். பிறகு, நட்சத்திரம் ஒன்றினால் வழி நடத்தப்பட்ட ஞானிகள் யூதர்களின் ராஜாவாகப் பிறந்துள்ளவரைப் பற்றி*

*விசாரிக்கத் தொடங்கினார்கள். பெரிய ஏரோது என்ற அரசர் எச்சரிக்கையடைந்து, அவர்கள் தேடும் அந்த அரசர் தீர்க்கதரிசனத்தின்படியான கிறிஸ்துவாயிருக்கலாமோ என்று ஆச்சரியப்பட்டார். கிறிஸ்து பிறக்கும் இடம் முன்னுரைக்கப்பட்டிருந்ததை அவர் அறிந்தார் என்பது உறுதியே, ஆனாலும் எந்த நகரத்தின் பெயர் குறிக்கப்பட்டிருந்தது என்று அறியும்படி அவர் கவலைப்படவில்லை. அவர், "கிறிஸ்து எங்கு பிறக்க வேண்டும் என்பதை மிகச் சரியாக நான் அறிந்து கொண்டால், அந்தப் போட்டி அரசனை நான் கண்டு பிடித்து ஒழித்து விட முடியும்" என்று நினைத்தார். "அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச் செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்" (மத். 2:4). பழைய ஏற்பாட்டை நன்கு வாசித்திருந்தவர்கள், "யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறப்பார்; ... என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது" (மத். 2:5, 6) என்று பதில் உரைத்தார்கள்.*

*கிறிஸ்துவின் பிறப்பிடமாக அடையாளம் காட்டப்பட்ட ஊரைப் பற்றி யூதர்களின் மனங்களில் சந்தேகம் இருந்ததில்லை என்பதைப் பல வருடங்களுக்குப் பிறகு நடந்த இன்னொரு நிகழ்ச்சியானது உறுதிப் படுத்துகின்றது. அவர்களுக்குள்ளே விவாதித்து பின்வருமாறு விவாதித்தார்கள்: "தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதவாக்கியம் சொல்லவில்லையா?" (யோவா. 7:42).*

## *எகிப்தில் இருந்து அழைக்கப்பட்டவர் (ஓசியா 11:1)*

*மொத்தமாகச் சுமார் முப்பது இலட்சம் இஸ்ரவேல் மக்கள் கர்த்தரால் ஒரு நபராகக் காணப்பட்டு அந்த நபர் ஒரு தகப்பனுடைய குமாரன் என்ற வகையில் தேவனுடன் தொடர்பு படுத்தப்பட்டார்: "இஸ்ரவேல் என்னுடைய குமாரன் ... என்று கர்த்தர் சொன்னார்" (யாத். 4:22ஆ, 23ஈ). இந்த மகன் மிகவும் அன்பு காட்டப்பட்டார், மற்றும் மனவுருக்கமுள்ள தகப்பனானவர் தம் மகன் எகிப்திய அடிமைத்தனத்தில் கண்டிக்கப்பட்டது பற்றி மிகவும் மனவருத்தம் அடைந்தார். இரக்கமுள்ள அந்தத் தகப்பன் அந்தத் துன்பத்திலிருந்து விடுதலையை அனுப்பினார். தேவன் மோசேயைத் தலைவராக நியமித்து, தமது வல்லமையுள்ள கரத்தினாலும், நீட்டிய புயத்தினாலும் தமது மகனை பார்வோனின் மனிதத் தன்மையற்ற பணியிலிருந்து விடுவித்தார். "இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" (ஓசி. 11:1). தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்ட அந்த இளமை நிறைந்த இனமானது எகிப்திலிருந்து பயணம் புறப்பட்டு இஸ்ரவேல் அல்லது பலஸ்தீனம் என்னப்பட்ட நாட்டிற்குச் சென்றது.*

*தேவன் தாம் இஸ்ரவேலை நேசித்திருந்து தமது குமாரனை எகிப்திலிருந்து அழைத்திருந்ததை எழுதும்படி அவர் கி.பி. சுமார் 750ம் ஆண்டில் ஓசியாவை ஏவினார். அவர் கடந்த காலத்தை நினைப்பூட்டுதல் மற்றும் முன்னுரைத்தல் ஆகிய இரண்டையும் செய்தார்; அவர் ஒரே வேளையில் பின்னோக்கியும் மற்றும் முன்னோக்கியும் பார்த்தார். அவர் 750 வருடங்களுக்கு முன்பு தேவனுடைய குமாரன் (பிற்பாடு இஸ்ரவேல் இனம் என்றழைக்கப்பட்டது) எகிப்தை விட்டுப் புறப்பட்டதைப் பின்னோக்கிப் பார்த்தார். அவர் சுமார் 750 வருடங்களுக்குப் பின்பு தேவனுடைய இன்னொரு குமாரன், தேவனுடைய தனிச் சிறப்பான குமாரன் எகிப்திலிருந்து புறப்பட்டு இஸ்ரவேலின் தேசமான பலஸ்தீனத்திற்குப் புறப்பட்டுச் செல்வதையும் முன்னோக்கிப் பார்த்தார். இஸ்ரவேல் ஒரு இளமை நிறைந்த இனமாயிருந்த, ஒரு குழந்தையாயிருந்த காலத்தை அவர் பின்னோக்கிப் பார்த்தார். இஸ்ரவேலின் எதிர் தன்மையான இயேசு குழந்தையாக வரப்போகும் காலத்தை அவர் முன்னோக்கிப் பார்த்தார். துன்மார்க்கனான பார்வோன் என்ற அரசன் தேவனுடைய குமாரனை கொடுமைப் படுத்திய காலத்தை அவர் பின்னோக்கிப் பார்த்தார். இன்னொரு துன்மார்க்கனான ஏரோது என்ற அரசன் தேவனுடைய குமாரனை அழிக்கத் தேடும் காலத்தை அவர் முன்னோக்கிப் பார்த்தார்.*

*இஸ்ரவேலின் கடந்த காலத்தைத் தேவன் நினைப்பூட்டுகையில், எதிர்காலத்திற்கான ஒரு செய்தியையும் அவர் ஓசியாவின் எழுதுகோல் மூலம் அனுப்பினார். மத்தேயு 2:19-21ல் இதன் அர்த்தம் வெளிப்படுத்தப்படுகின்றது.*

> *ஏரோது இறந்த பின்பு, கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு: "நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடியவர்கள் இறந்து போனார்கள்" என்றான். அவன் எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான்.*

*யோசேப்பு தூதனுக்குக் கீழ்ப்படிந்த பொழுது, ஓசியா 11:1ன் முன்னு ரைத்தலின் அர்த்தத்தை நிறைவேற்றுவதில் அவர் தேவனுடைய கருவியாக இருந்தார். மத்தேயு, "... எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத். 2:15) என்று பதிவு செய்தார்.*

*ஆகையால், ஓசியா 11:1 வசனப் பகுதியானது பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட அர்த்தங்கள் மற்றும் புதிய ஏற்பாட்டின் மாபெரும் தனிச்சிறப்புக்கள் ஆகியவற்றையும் கூட குறிப்பிடுகின்ற பழைய ஏற்பாட்டின் இன்னொரு கூற்று ஆகும்.*

## *முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டவர்*
## *(சகரியா 11:12)*

*கி.மு. ஆறாம் நூற்றாண்டின் தீர்க்கதரிசியாகிய சகரியாவின் கூற்றுப்படி, அவரது (இயேசுவின்) இரத்தக் கிரயத்தை வஞ்சக எண்ணம் கொண்ட சதிகாரன் பெறுவான்: "உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால், என் கூலியைத் தாருங்கள்; இல்லாவிட்டால் இருக்கட்டும்;" (சகரி. 11:12அ). வஞ்சக எண்ணம் கொண்ட சக சதிகாரர்கள் அவனது நிபந்தனைகளை ஒப்புக் கொள்வார்கள் என்று தீர்க்கதரிசி முன்னுரைத்தார் மற்றும் அந்த முன்னுரையாளர் பின்வரும் வார்த்தைகளைக் காட்டிக் கொடுப்பவனின் வாயில் இட்டார்: "அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக் காசை நிறுத்தார்கள்'' (சகரி. 11:12ஆ). ஒரு வெள்ளிக்காசு என்பது 64 செண்ட்டுகள் (31 ரூபாய்) மதிப்புள்ளது, மற்றும் முப்பது வெள்ளிக்காசு என்பது ஒரு அடிமையின் விலையாக இருந்தது (யாத். 21:32).*

*சகரியாவின் வார்த்தைகள் சுமார் ஐந்நூறு வருடங்களுக்குப் பிறகு நிறைவேறியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்: ''அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்: 'நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்' என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்'' (மத். 26:14, 15).*

## தேவனால் கைவிடப்பட்டவர்
## *(சங். 22:1)*

*தாவீது பலமுறைகள் சவுலினாலோ அல்லது அப்சலோமினாலோ துரத்தப்பட்டு, ஒரு குகை அல்லது காடுகளில் ஒளிந்து கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். அப்படிப்பட்ட வேளைகளில், தேவன் தம் உதவியைப் பின்னடையச் செய்தார் என்று அவர் நினைத்திருக்கலாம். அவசர காலங்களின் போது, "மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூர மாத்திரம்" (1 சாமு. 20:3) இருந்த பொழுது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' (சங். 22:1அ) என்று கதறுவது தாவீதின் மனுஷீகப் பண்பாக மட்டுமே இருந்தது. தேவன் அவரைக் கைவிட்டிருந்ததில்லை, ஏனெனில் பொய்யுரையாத தேவன் - பட்சபாதம் காண்பிக்காத தேவன் - "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (யோசு. 1:5; மற்றும் எபி. 13:5ஐக் காணவும்) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். இருந்த போதிலும் மனுஷீகமாய்ப் பேசும் போது, தாவீது தேவனால் கைவிடப்பட்டதாக உணர்ந்தார், மற்றும் அவரது கதறுதல் புரிந்து கொள்ளப்படக் கூடியதாய் இருக்கின்றது.*

*ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, தாவீதின் குமாரன் ஒருவர் விரோதிகளால் துன்புறுத்தப்பட்டு, சிலுவையில் இருந்து சத்தமிட்டுக் கதறினார்: "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?"*

(மத். 27:46ஆ). சூரிய ஒளியானது இயேசுவை நண்பகல் முதல் பிற்பகல் மூன்று மணி வரை கைவிட்டு இருந்தது, அவரது சீஷர்கள் ஓடி விட்டிருந்தார்கள், மற்றும் தேவன் அவரிடத்திலிருந்து புறம்பே திரும்பிக் கொண்டிருந்தார். தாவீதின் விஷயத்தில் தேவனால் கைவிடப்பட்டதென்பது உண்மையானதாய் இருக்கவில்லை: மனத்துயரம் சஞ்சலமும் நிறைந்த மனிதருக்கு (தாவீதுக்கு) அது அவ்விதமாகக் காணப்பட்டது என்பதே உண்மையாகும். இயேசுவின் விஷயத்தில், தேவனால் கைவிடப்பட்டதென்பது உண்மையானதாய் இருந்தது: சிலுவையில் அறையப்பட்டிருந்த மணி வேளைகளில், இயேசு பாவத்தின் சாயலானார். “நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்” (2 கொரி. 5:21). சுத்த(க் கண்ணனான) தேவன் தீமையை நோக்கிக் கொண்டிருக்க முடியாதவராகையால் (ஆபகூ. 1:13), அவர் தம் கண்களைப் புறம்பே திருப்பிக் கொண்டிருந்துவிட்டார். இயேசு அதை உணர்ந்தார், ஏனெனில் அவரது இருப்பில் முதன்முதலாக அப்பொழுதுதான் தேவன் அவரிடத்தில் இருந்து புறம்பே திரும்பியிருந்தார்.

மேலும், “தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்” (உபா. 21:23) என்று நியாயப்பிரமாணம் கூறியிருந்தது; ஆகையால், “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்” (கலா. 3:13அ). இயேசு நமக்காகச் சாபமானார்.

இப்படி நடத்தப்படுவதற்கு அவர் எவ்வகையிலும் பாத்திரரல்ல. தேவனோ, “நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்” (ஏசா. 53:6) என்று இருக்கையில் அடிபட வேண்டிய மக்கள் விடுதலையாகிச் சென்றார்கள் (ஏசா. 53:5, 8). பிதாவானவர் “என்னைத் தனியேயிருக்க விடவில்லை” (யோவா. 8:29ஆ) என்ற உறுதிப்பாட்டினால் இயேசு தமது மகிழ்ச்சியான நாட்களில் மகிமையடைந்திருந்தார்; “நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்” (யோவா. 11:42அ) என்ற இந்தத் தைரியத்தில் அவர் களிகூர்ந்திருந்தார். இருப்பினும், சிலுவையின்மீது தேவன் கேட்கவில்லை; அங்கு தேவன் அவரைத் தனிமையில், மிகவும் தனிமையில் விட்டு விட்டார்! இயேசு அந்தத் தனிமையை உணர்ந்தார்!

உலகத்தை மீட்பதற்குத் தாம் பாவமாக வேண்டும் என்பதையும், அவ்வாறாகும்போது தாம் தேவனால் கைவிடப்பட வேண்டும் என்பதையும் இயேசு அறிந்தார். பிறகு ஏன் அவர் தம்முடைய பிதா தம்மிடத்தில் இல்லாது போவதைப் புரிந்து கொள்ளாதது போலச் சத்தமிட்டுக் கதறினார்? ஒருவேளை நாம் இந்த வாழ்க்கையில் இதை அறிய முடியாது; ஒருவேளை இது இந்த ஆழமான மனத்துயரில் இயேசுவின் மனிதப் பகுதியாக மட்டுமே இருக்கலாம்.

## மீண்டும் உயிர் பிழைத்த பிணம் (சங். 16:10)

சங்கீதம் 16:10 ஆனது, இயேசுவுடன் மட்டும் தொடர்புடைய அர்த்தம்

*பெற்றுள்ள, சுத்தமானதொரு முன்னுரைக்கும் தீர்க்கதரிசனமாகவே காணப்படுகின்றது: "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" (சங். 16:10). குறிப்பிட்ட இந்த முன்னுரைத்தலில் தாவீது தம்மைப் பற்றி எழுதிக் கொண்டிருந்ததில்லை. அவர் மரித்த பிறகு, "தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு, அழிவைக் கண்டான்" (அப். 13:36). ஆயிரம் வருடங்களுக்குப் பிற்பாடு, தாவீதின் திறக்கப்படாதிருந்த கல்லறையைப் பேதுரு குறிப்பிட்டார்: "சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது" (அப். 2:29).*

*தீர்க்கதரிசியாய் இருந்து (அப். 2:30) தாவீது முன்னறிய முடிந்திருந்தது (அப். 2:31). அவர் சங்கீதம் 16:10ஐ எழுதிய பொழுது, "கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான். இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்" (அப். 2:31, 32அ), மற்றும் "தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை" (அப். 13:37).*